# ஜிப்மர் முதுநிலை உள்ளிருப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு ஜூலை 7-ல் போட்டித்தேர்வு

● புதுச்சேரி

புதுச்சேரி மற்றும் காரைக் காலில் உள்ள ஜிப்மர் மருத்துவமனையில் அனஸ்தீசியாலஜி, உடற் கூறியல், உயிர் வேதியியல், பல் மருத்துவம், தோல் மருத்துவம், இஎன்டி, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, தடயவியல் மருத்துவம், முதியோர் மருத்துவம், மகப்பேறு, மருந்தியல், கண் மருத்துவம், மனநோய், நுண்ணுயிரியல், கதிர்வீச்சு புற்றுநோயியல், ரேடியோ புற்றுநோயியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 102 முது நிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணி யிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்த பதவிக்கு ஜூன் 4-ம் தேதி தொடங்கி 24-ம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதற்கான ஆன்லைன் போட்டித்தேர்வு வரும் 7-ம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை நடக்கி றது. இத்தேர்வில் பங்கேற்பதற்கான ஹால்டிக்கெட் ஜூலை 2-ம் தேதி முதல் 'www.jipmer.edu.in' என்ற ஜிப்மர் இணையதளத்தில் இருந்து விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த தேர்வு சென்னை, டெல்லி, கொல்கத்தா, மும்பை, புதுச்சேரி ஆகிய 5 நகரங்களில் நடக்கிறது. போட்டித்தேர்வு முடிவு மற்றும் தற்காலிக மாக நேர்முக தேர்வுக்கு தகுதி பெற்ற விண்ணப்ப தாரர்கள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
1.7.2024 (திங்கட்கிழமை)

ஜிப்மரில் காலியாக உள்ள

# 102 முதுநிலை மருத்துவ அதிகாரி பணிக்கு தேர்வு

## 7-ந் தேதி நடக்கிறது

புதுச்சேரி, ஜூலை:1-

புதுச்சேரி ஜிப்மர் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி, காரைக்காலில் உள்ள ஜிப்மர் மருத்துவமனையில் உயிர்வேதியியல், பல் மருத்துவம், தோல் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 102 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே பெறப்பட்டன. இதற்கான போட்டி தேர்வு வருகிற 7-ந் தேதி காலை நடைபெற உள்ளது.

தேர்வுக்கான ஹால்டிக்கெட் ஜிப்மர் இணையதளத்தில் (www.jipmer.edu.in) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த தேர்வு புதுச்சேரி, சென்னை, டெல்லி, கொல்கத்தா, மும்பை ஆகிய 5 நகரங்களில் நடக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

# ஜிப்மரில் முதுநிலை டாக்டர் பதவிக்கு வரும் 7ம் தேதி போட்டித்தேர்வு

**புதுச்சேரி, ஜூலை 1–** ஜிப்மர் மருத்துவமனையில், 102 முதுநிலை உள்ளிருப்பு டாக்டர் பதவிக்கு, வரும் 7ம் தேதி போட்டித் தேர்வு நடக்கிறது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள, ஜிப்மர் மருத்துவமனையில் அனஸ்தீசியாலஜி, உடற்கூறியல், உயிர் வேதியியல், பல் மருத்துவம், தோல் மருத்துவம், இ.என்.டி., பொதுமருத்துவம், பொது அறுவை சிகிச்சை, தடயவியல் மருத்துவம், முதியோர் மருத்துவம், மகப்பேறு, மருந்தியல், கண் மருத்துவம், மனநோய், நுண்ணுயிரியியல், கதிர் வீச்சு புற்றுநோயியல், ரேடியோ புற்றுநோயியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் மொத்தம், 102 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இந்த பதவிக்கு கடந்த ஜூன் 4ம் தேதி முதல் 24ம் தேதி வரை, விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இதற்கான ஆன்லைன் போட்டி தேர்வு வரும் 7ம் தேதி காலை 9:00 மணி முதல் 10:00 மணி வரை நடக்கிறது.

இத்தேர்வில், பங்கேற்பதற்கான ஹால் டிக்கெட், நாளை 2ம் தேதி முதல், *www.jipmer.edu.in*, என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்தேர்வு சென்னை, டில்லி, கொல்கத்தா, மும்பை, புதுச்சேரி ஆகிய 5 நகரங்களில் நடக்கிறது.

தினகரன்
ஜுன் 30, 2024 ஞாயிற்றுக்கிழமை

## ஜிப்மர் மருத்துவமனையில்

# 102 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவர் பதவிக்கு 7ம் தேதி போட்டித்தேர்வு

புதுச்சேரி, ஜூன் 30: புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள ஜிப்மர் மருத்துவமனையில் அனஸ்தீசியாலஜி, உடற்கூறியல், உயிர்வேதியியல், பல் மருத்துவம், தோல் மருத்துவம், ஈஎன்டி, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, தடயவியல் மருத்துவம், முதியோர் மருத்துவம், மகப்பேறு, மருந்தியல், கண் மருத்துவம், மனநோய், நுண்ணுயிரியல், கதிர்வீச்சு புற்றுநோயியல், ரேடியோ புற்றுநோயியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 102 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளது. இப்பதவிக்கு கடந்த ஜூன் 4ம் தேதி முதல் 24ம் தேதி வரை இந்திய குடிமகன்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

இந்த பதவிக்கான ஆன்லைன் போட்டி தேர்வு வருகிற 7ம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை நடக்கிறது. இத்தேர்வில் பங்கேற்பதற்கான ஹால்-டிக்கெட் வருகிற 2ம் தேதி முதல் www.jipmer.edu.in என்ற ஜிப்மர் இணையதளத்தில் இருந்து விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்தேர்வு சென்னை, டெல்லி, கொல்கத்தா, மும்பை, புதுச்சேரி ஆகிய 5 நகரங்களில் நடக்கிறது. போட்டி தேர்வு முடிவு மற்றும் தற்காலிகமாக நேர்முக தேர்வுக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் விவரம், நேர்க்காணலுக்கான தற்காலிக தேதி மற்றும் இறுதி முடிவு அறிவிக்கப்படும் தற்காலிக தேதி உள்ளிட்டவை பின்னர் அறிவிக்கப்படும் என ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.